**வேலூர் மாவட்டக் கூடுதல் முதன்மை கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை : திருமதி. எஸ். மணிமொழி, எம்.ஏ., எம்.எட்., எம்.பில்.,**
**ந.க.எண்:1797/மாஒ5/கலை/ஒபக/2023, நாள்:29.11.2023**

**பொருள்:** வேலூர் மாவட்டம் – ஒருங்கிணைந்த பள்ளிள் கல்வி – அரசு நிதியுதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கான கலைத் திருவிழா போட்டிகள் 2023–24 – மாநில அளவிலான போட்டிகள் வழிகாட்டு நெறிமுறைகள் வழங்குதல் – சார்பு.

**பார்வை:** சென்னை–6, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநிலத் திட்ட இயக்குநர் அவர்களின் கடிதம், ந.க.எண்:228/ஆ3/கலை/ஒபக/ 2023, நாள்:28.11.2023.

------

அனைத்து அரசு நிதியுதவி பெறும் நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 12 வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு 30.11.2023, 01.12.2023 மற்றும் 02.12.2023 வரை மாநில அளவிலான கலைத் திருவிழா 2023–2024 போட்டிகள் இணைப்பில் உள்ளவாறு நாமக்கல் மாவட்டத்தில் நடைபெறவுள்ளதால் பார்வையில் காணும் மாநிலத் திட்ட இயக்குநர் அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி மாநில அளவில் பங்கேற்க வேண்டிய மாணவர்களை உரிய பாதுகாப்பு வசதிகளுடன் அழைத்துச் சென்று வர நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சார்ந்த அரசு நிதியுதவி பெறும் பள்ளித் தலைமையாசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு:**
1. பார்வையில் காணும் கடிதம்.
2. போட்டி நடைபெறும் இடம்.
3. மாவட்ட அளவில் வெற்றி பெற்ற மாணவர்கள் விவரம்.

**கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்,**
**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,**
**வேலூர் மாவட்டம்.**

29/11/23

**பெறுநர்:**
1. தலைமையாசிரியர்கள், அனைத்து அரசு நிதியுதவி பெறும் நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள். (உரிய வழியாக)
2. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) வேலூர் மாவட்டம்.
3. மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) வேலூர் மாவட்டம்.
4. வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்
5. வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் (பொ), வேலூர் மாவட்டம்.

**நகல்:**
1. மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை – 6, அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. முதன்மைக் கல்வி அலுவலர், வேலூர் மவாட்டம் அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பலாகிறது.